பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 05 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு நான்காவது கட்ட தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கியது.

2. ஆந்திர மாநிலத்தில் 175 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், ஒடிசாவில் 28 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

3. பிஜேபி தலைமையிலான ஆட்சியில் தான் பழங்குடியினருக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

4. காங்கிரஸ் ஆட்சியில் தான் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>>

மக்களவைக்கான நான்காவது கட்ட வாக்குப்பதிவு 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட 96 தொகுதிகளில் இன்று காலை தொடங்கியது.

மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆந்திராவில் 25, தெலங்கானாவில் 17, உத்தரபிரதேசத்தில் 13, மகாராஷ்ட்ராவில் 11, மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 8, பீகாரில் 5, ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதி என 96 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்காளர்களின் பங்கேற்பை அதிகரிக்கும் வகையில், தெலங்கானாவில் 17 தொகுதிகளில் வாக்குப்பதிவு நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

8 கோடியே 97 லட்சம் ஆண் வாக்காளர்கள், 8 கோடியே 73 லட்சம் பெண் வாக்களர்கள் என மொத்தம் 17 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் இன்று வாக்களிக்கவுள்ளனர்.

இந்நிலையில், பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, மேற்குவங்க மாநிலம், ஹூக்ளியில் நேற்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது, பழங்குடியினருக்கான நிதி ஒதுக்கீட்டை விட, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அதிகமாக நிதி ஒதுக்கியது என்று அவர் கூறினார்.

பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையும் தமது ஆட்சிக்காலத்தில் உயர்த்தி வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலத்தில், திரிணாமுல் காங்கிரஸ் தலைமையிலான அரசு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் முறைகேடான வகையில் ஆசிரியர்களை தேர்வு செய்ததால், அம்மாநிலத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திவிட்டது என்றும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

முன்னதாக, அவர், ஹவுரா மக்களவை தொகுதியிலும், பரக்பூர் மக்களவைத் தொகுதியிலும் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் உரையாற்றினார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி, நேற்று ரேபரேலி தொகுதியில் தனது பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

இந்த தொகுதியில் காங்கிரஸ் ஆட்சியில் தான் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா, வாரணாசியில் நேற்று பிஜேபியின் ஊடக மையத்தை திறந்து பேசினார்.

இந்த தொகுதியில் போட்டியிடும் திரு. நரேந்திர மோடியை ஆதரித்து, அவர் திறந்த வாகனத்தில் சென்று ஆதரவு திரட்டினார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான திரு. அகிலேஷ் யாதவ், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, பாராபங்கியில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

முன்னதாக, லக்னோ மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு தொகுதிகளில் திரு. அகிலேஷ் யாதவ் பிரச்சாரம் மேற்கொண்டார்.

<<<<>>>>>>

ஆந்திராவில், மக்களவை தேர்தலுடன் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவும் இன்று காலை தொடங்கியது.

175 சட்டப்பேரவை தொகுதிகளில் 2 ஆயிரத்து 386 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஆளும் ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ், தெலுகு தேசம், காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

திரு. ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் அனைத்து தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகிறது.

முன்னாள் முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுகு தேசம் கட்சி, பிஜேபி மற்றும் ஜனசேனா கட்சியுடன் கூட்டணி அமைத்து இந்த தேர்தலை சந்திக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய இடதுசாரி கட்சிகளுடன் கூட்டணி அமைத்து காங்கிரஸ் கட்சி இந்த தேர்தலை எதிர்கொள்கிறது.

இம்மாநிலத்தில் 46 ஆயிரத்து 389 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றம் நிறைந்த தொகுதிகளில் துணை ராணுவப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மலைப்பிரதேசமான **Araku, Padere, Rampachodavaram** ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளில் பாதுகாப்பை கருதி மாலை 4 மணி வரை மட்டும் வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<>>>>>>

ஒடிசா மாநிலத்தில் நான்கு மக்களவைத் தொகுதிகளுடன், 28 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று முதல்கட்ட வாக்குப்பதிவு தொடங்கியது.

**Kalahandi, Koraput, Nabarangpur** மற்றும் **Berhampur** ஆகிய நான்கு மக்களவைத் தொகுதிகளில் 37 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

28 சட்டப்பேரவை தொகுதிகளில் 243 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த மாநிலத்தில் ஆளும் பிஜு ஜனதா தளம், பிஜேபி, காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இன்றைய வாக்குப்பதிவில் 62 லட்சத்து 87 ஆயிரம் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

இம்மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகள் ஆதிக்கம் அதிகமாக உள்ள **Malkangiri, Kalahandi, Koraput, Nabarangpur** ஆகிய மாவட்டங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**<<<<>>>>>>**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான – இஸ்ரோ, புதிய ராக்கெட்டின் எஞ்சின் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை மையத்தில் இந்த சோதனை நடைபெற்றதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மறுவடிவமைக்கப்பட்ட **PS-4** ரக எஞ்சின், 14 பிரிவுகளுக்கு மாற்றாக பயன்படுத்த முடியும்.

இதன் காரணமாக, ராக்கெட்டில் தலா ஒரு எஞ்சினுக்கு பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்களின் பயன்பாடு கணிசமாக குறையும் என்றும், தாதுப்பொருட்களின் அளவு 565 கிலோவிலிருந்து, 13 புள்ளி ஏழு கிலோவாக குறையும் என்றும் இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பிஎஸ்.4 ரக எஞ்சின் **PSLV** ராக்கெட்டில் நான்காவது கட்டத்தில் பயன்படுத்தப்படும்.

இனி வரும் காலங்களில் செலுத்தப்படும் **PSLV** ராக்கெட்டுகளில் இத்தகைய எஞ்சின்களை வழக்கமாக பயன்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

<<<<>>>>>>

தமிழகத்தின், நாகை மக்களவைத் தொகுதி உறுப்பினர் திரு. செல்வராஜ் இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 66.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இவர் நாகப்பட்டிணம் மக்களவைத் தொகுதியிலிருந்து 1989, 1996, 1998, 2019 என நான்குமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினராக செயல்பட்டு வந்த அவர், உடல்நலக்குறைவு காரணமாக, சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

செல்வராஜ் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>>

வியட்நாம் சென்றுள்ள இந்திய கடற்படையின் **Kiltan** போர்க்கப்பலுக்கு அந்நாட்டு கப்பற்படை மற்றும் இந்திய தூதரக அலுவலகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியாவுடன் கடல் மார்க்கமாக நீண்டகாலமாக உறவுகளை கொண்டுள்ள நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், இந்த பயணம் அமைந்துள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கில்டன் போர்க்கப்பலில் உள்ள இந்திய கடற்படை வீரர்கள் வியட்நாம் நாட்டு கடற்படை வீரர்களுடன் தொழில்நுட்ப ரீதியாக கலந்துரையாடவுள்ளனர்.

இருநாடுகளின் கடற்படை வீரர்கள் கூட்டுப் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளனர்.

<<<<>>>>>>

காஸாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால், பெரும் பாதிப்பை பாலஸ்தீன மக்கள் சந்திக்க நேரிடும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், **Rafah** நகரின் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது.

10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் அந்நகரிலிருந்து மக்கள் வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இஸ்ரேல் அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்கள், அந்நகரிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதிலிருந்து, பாதுகாப்பான இடத்தை மக்கள் தேடி வருவதாகவும், ஆனால் இதுவரை அத்தகைய இடம் கிடைக்கவில்லை என்றும் ஐநா நிவாரணப் பணி முகமையின் ஆணையர் **General Philippe Lazzarini** கூறியுள்ளார்.

<<<<>>>>>>

இந்தோனேஷியாவின் மேற்கு சுமத்ரா மாகாணத்தில், கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி, 28 பேர் உயிரிழந்தனர், நான்கு பேரை காணவில்லை என்று அந்நாட்டு பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கால், அந்த மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, ஆப்கானிஸ்தானில் சமீபத்திய வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 315ஆக அதிகரித்துள்ளது.

பிரேஸில் நாட்டிலும் பல இடங்களில் கனமழை காரணமாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மழையில் சிக்கி இதுவரை 136 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<>>>>>>

கடலோர ஆந்திரா, ஏனாம், தெலங்கானா, ஒடிசா, தமிழகம், கர்நாடகா மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு முதல் 3 நாட்களுக்கு ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ஜார்க்கண்ட், மேற்குவங்கம், அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் தெற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், கில்ஜிட், பலுசிஸ்தான், முஸாஃபராபாத், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ராகண்ட் ஆகிய இடங்களில் இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பெங்களூரு அணி 47 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

இதில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 187 ரன் எடுத்தது.

188 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் விளையாடிய தில்லி அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 140 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், சென்னை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

<<<<END>>>>>